செ.வெ.எண்.69 நாள்.23.10.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளி,கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வ தொண்டு பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் துப்புரவு பணிகளில் ஈடுபடுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-------

திருநெல்வேலி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும், பள்ளி,கல்லூரி மாணவ, மாணவியர்கள், என்எஸ்எஸ், என்சிசி, ரெட்கிராஸ், லயன்ஸ் கிளப், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் ஆகியோரை ஒருங்கிணைத்து டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் துப்புரவு பணிகளில் ஈடுபடுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (23.10.2017) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்று வரும் மெகா துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள சுமார் 2000 பணியாளர்களை ஈடுபடுத்தி, பல்வேறு பகுதிகளில் தீவிரமாக கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளில் கல்லூரி மாணவ, மாணவிகளை ஈடுபடுத்தி, பொதுமக்களிடம் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்துப் பகுதிகளிலுள்ள தன்னார்வ தொண்டு பிரதிநிதிகள் தாங்கள் வசிக்கும் இடங்களில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து, துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும். கல்லூரி மாணவ, மாணவிகளை வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் போன்றவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என்பதை கண்காணித்து, பொதுமக்களிடம் டெங்கு கொசு புழு உற்பத்தியாவதை தடுத்திட விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும்.

பொது மக்களிடம் காய்ச்சல் ஏற்பட்டால் அரசு மருத்துவமனைகளுக்கு சென்று, டெங்கு காய்ச்சல் உள்ளதா என பரிசோதனை செய்திட அறிவுறுத்த வேண்டும். மேலும், டெங்கு கொசு எதனால் உற்பத்தியாகிறது என்பதனை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்த வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகள் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டால் திருநெல்வேலி மாவட்டத்தினை டெங்கு கொசு பாதிக்காத மாவட்டமாக மாற்றிடலாம் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மாநகர நல அலுவலர் மரு.பொற்செல்வன், கோட்டாட்சித் தலைவர்கள் திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன் உள்பட கல்லூரிகளின் பிரதிநிதிகள், என்எஸ்எஸ், என்சிசி, ரெட் கிராஸ் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், லயன்ஸ் கிளப் பிரதிநிதிகள், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.